REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 4உ வியாழன் (17—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 5உ வெள்ளி (18—3—55) [இதழ் 235

20,000 தொழிலாளர்கள் வேலை இழந்தனர்

துணி ஆலைகள் மூடப்பட்டதின் எதிரொலி

"கடந்த 1953-ம் ஆண்டில் ஒன்பது துணி ஆலைகளும், 1954-ல் 10 துணி ஆலைகளும் மூடப்பட்டன; அவை இன்றுவரையில் திறக்கப்படாமலேயே இருப்பதால், 1953-ல் 9,802 தொழிலாளர்களும் 1954-ல் 12,155 தொழிலாளர்களும் வேலை இழந்தனர்,"

—என்ற தகவலை வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி டில்லி மேல் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆசியாவில் அணுகுண்டு வீச அமெரிக்கா சதி

சர்க்கார் ஊழியர் போர் முழக்கம்!

உரிமையைப் பறிக்காதே - ஊதியத்தை குறைக்காதே!

தஞ்சை, மார்ச் 16—

கெஜட் பதிவில்லாத சர்க்கார் சிப்பந்திகள் தஞ்சையில் நடைபெற்ற மாநாட்டின்போது போர் முழக்கம் செய்திருக்கிறார்கள்.

"சென்னை சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் தரப்படுவதைப் போன்றே ஊதியம் தரப்படவேண்டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'சர்க்கார் ஊழியர் நடத்தை விதிகள்,' என்ற பெயரால், ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் பலவற்றை சென்னை அரசாங்கம் பறித்து வைத்திருப்பதாகக் கூறி, சென்னை அரசாங்கத்தின் மீது உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டு, காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது.

தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதில் மாநாட்டுப் பிரதிநிதிகளிடை பலத்த கருத்து வேறுபாடு ஏற்பட்டமையால், தீர்மானம் கைவிடப்பட்டிருக்கிறது.

குறித்துள்ள வேலை நேரத்திற்கு பின்னும், அதிகாரிகள், சிப்பந்திகளிடம் வேலை வாங்குவதாயும், அம்மாதிரி அதிகாரிகள் ஊழியர்களை அதிக நேரம் உழைக்குமாறு நிர்ப்பந்திக்கக் கூடாதென சென்னை அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்ட கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியரின் மூன்றாவது மாநாடு, தஞ்சையில் அருளானந்தசாமி தோட்டத்தில் நடைபெற்றது.

தஞ்சை மாவட்ட கலெக்டர் சி. ஏ. இராமகிருஷ்ணன் மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில், 'மக்கள் ஊழியர் சங்கம்' என்று சங்கத்தின் பெயரை மாற்றி வைத்துக் கொள்ளுமாறு யோசனை கூறியிருக்கிறார்.

மாநாட்டிற்கு ஆர். பாலகிருஷ்ண நாயுடு என்ற தாசில்தார் தலைமை தாங்கியிருக்கிறார்.

"தோட்டாக்களைப்போல் அணுகுண்டுகளையும் ஏன் உபயோகிக்கக்கூடாது?"

ஐசனேவரின் போர்க் கூச்சல்

வாஷிங்டன், மார்ச் 16—

ஆசியா மீது யுத்தம் துவக்குவதற்கான வாய்ப்பு பற்றிக் கேட்டபோது, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர், யுத்தம் துவக்குவதற்கான வாய்ப்பு எப்பொழுதுமே இருந்துவருகிறது என்றும், தான் இளைஞராயிருந்தபோது இருந்ததைக் காட்டிலும் இப்போது யுத்தம் துவக்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன என்றும், எனவே, அதிகமான முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்ற வாரம் அமெரிக்க வெளிநாட்டிலாகா மந்திரி டல்லஸ், 'அணு ஆயுதங்கள், எந்த ஒரு பெரிய நடவடிக்கையிலும் உபயோகிக்கப்படும்,' என்று கூறியதைப்பற்றிக் கேட்டபோது, ஐசனேவர், 'இராணுவத் தளங்களை மட்டும் போர்த் தந்திர முறையில் தாக்க, வேறு இடங்களில் சாதாரண தோட்டாக்களை உபயோகிப்பதைப்போல, அணு ஆயுதங்களையும் ஏன் உபயோகிக்ககூடாது என்பதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், அணு ஆயுத உற்பத்தியில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டிருப்பதாயும், சந்தர்ப்பம் நேரும்போது தாங்கள் அந்த ஆயுதங்களை, இராணுவ இலக்குகளில்தான் சரியாக விசுகிறேமென்பதை உறுதி செய்ய முடியாதென்றும் கூறியிருக்கிறார்.

டுனீசியா விடுதலை பெறுகிறது?

பாரிஸ், மார்ச் 15—

பிரெஞ்சு ஆதிக்கத்தில் உள்ள டுனீசியாவுக்கு சுயாட்சி வழங்குவது பற்றிய பேச்சுவார்த்தைகளை மீண்டும் பிரெஞ்சு அரசாங்கம் துவங்கியுள்ளது. கடந்த 40 நாட்களுக்குமுன், மெண்டே பிரான்ஸ் தோற்கடிக்கப்பட்டதிலிருந்து இந்தப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

வருகிற 'ஈஸ்டர்' விடுமுறைகளுக்குமுன் சுயாட்சிக்கான ஏற்பாடுகள் முடிவடைந்து விடக்கூடுமென நம்பப்படுகிறது.

சர்க்கார் ஊழியர் சம்பளப் பிரச்சினை

ஆலோசனைக்கு அவசியமில்லையாம்

அகவிலை குறைவதைக் காரணமாகக் காட்டுகிறார் அமைச்சர்

"பொருட்களின் அகவிலைகள் குறைந்துகொண்டே வருவதால், சர்க்கார் ஊழியர்கட்குப் பஞ்சப்படியை அதிகரிக்கும் விஷயத்தை ஆலோசனை செய்வது அவசியமில்லை," என்று, நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

"பஞ்சப்படியின் ஒரு பகுதியை அடிப்படை ஊதியத்துடன் இணைப்பது பற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?" என்ற கேள்விக்கு, அவ்வாறு செய்தால் 'ரிடையர்' ஆகிறவர்களுக்கு மட்டும்தான் பலன் ஏற்படுமென்றும், ஆகவே, அவ்வாறு செய்வது அவசியமானதாகவோ அல்லது உசிதமானதாகவோ இராது என்றும், மத்திய சர்க்கார் தரும் விகிதப்படி ரூ 300-ம் அதற்குக் குறைவாகவும் சம்பளம் வாங்கும் சென்னை சர்க்கார் ஊழியர்களுக்குக் 'கிராக்கிப் படி'யை உயர்த்தினால், சர்க்காருக்கு ரூ. 3,12,00,000 செலவாகும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

★

பிரான்சிலும் அணு ஆயுத உற்பத்தி

பாரிஸ், மார்ச் 16—

"பிரான்சும், தனியாகவோ அல்லது இதர ஐரோப்பிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்தோ நீர்வளிக் குண்டுகளை உற்பத்தி செய்யும்," என்று பிரெஞ்சு நாட்டுப் பிரதமர் எட்கார் பாவ்ரே கூறியிருக்கிறார்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் அவர் இம்முடிவை வெளியிட்டார்.

அவர், சீக்கிரமே உலகத்தில் இரு 'வர்க்க' நாடுகள் இருக்கும் என்றும், ஒன்று நீர்வளிக்குண்டுகளை வைத்திருப்பதாயும், மற்றொன்று நீர்வளிக்குண்டுகள் இல்லாதனவாயும் இருக்கும் என்றும் அவர் கூறினாராம்.

அந்தக் குண்டுகள் இல்லாத நாடுகள், வைத்திருக்கும் நாடுகளை விட வல்லரசுகளின் மிகவும் கீழான இடத்திற்குத் தள்ளப்படுகிற ஆபத்தும் இருக்கிறது; எனவேதான், இதுபற்றி பிரெஞ்சு சர்க்கார் மேற்கண்ட முடிவை எடுத்திருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

★

செஞ்சீனவுக்கு அணு ஆயுதங்கள்

ரஷியா உதவுமாம்!

நியூயார்க், மார்ச் 15—

செஞ்சீனவுக்கு, சில குறிப்பிட்ட எண்ணிக்கை அணுகுண்டுகளையும், விமானங்களையும், சோவியத் ரஷியா தந்துவிட்டிருப்பதாக அமெரிக்க வட்டாரங்கள் பரவலாக நம்புகின்றனவாம்!

அமெரிக்கா இராணுவ தளம் வைத்துள்ள ஒகினவா தீவில் தான் செஞ்சீன, அந்த ரஷிய அணுகுண்டுகளை வீசத் திட்டமிட்டிருப்பதாயும் தெரிய வருகிறதாம்!

அதிகாரிகள் அதிகபட்ச சம்பளம்

ரூ. 1,800 என பம்பாய் சர்க்கார் நிர்ணயம்

பம்பாய், மார்ச் 16—

பம்பாய் சர்க்கார் இலாகாக்களில் பணி புரியும் அதிகாரிகளின் உயர்ந்தபட்ச சம்பளம் இனி மாதம் ரூ. 1,800 ஆக மட்டுமே இருக்குமென்றும், இந்த நடவடிக்கை, மிகக் குறைவாக சம்பளம் பெறுவோர், அதிகமாக சம்பளம் பெறுவோர் ஆகியோரிடை நிலவும் மகத்தான ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காகத்தான் என்றும் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

இந்த புதிய திட்டப்படி, குறைந்த பட்ச சம்பளத்தைப் போல் முப்பது மடங்கைக் காட்டிலும் எந்த ஒரு அதிகாரிக்கும் அதிக பட்ச சம்பளம் இருக்காது என்று மந்திரி கூறியிருக்கிறார்.

இப்போது சர்க்கார் இலாகா காரியதரிசிகள் மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000; பிரதம காரியதரிசி ரூ. 3,750—என்று சம்பளம் வாங்குகிறார்கள். அதில் காரியதரிசிகள் ரூ.800 அல்லது 900 வருமானவரி செலுத்திவிடுகின்றனர் என்றும் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

'சிவில்' ஊழியர்கள்

புதுடில்லி, மார்ச் 16—

கடந்த 1953 ஜூன் திங்கள் 30-ந் தேதிய கணக்குப்படி இந்திய சர்க்கார் சிவில் உத்தியோகங்களில் 15,60,627 பேர் இருந்தனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

சினிமா 'விசிறி'களுக்கு தண்டனை!

தியேட்டரில் புகை பிடித்தனராம்!

ரெய்பூர், மார்ச் 15—

'சினிமா தியேட்டர்களில் புகை பிடிக்கக்கூடாது,' என்ற சட்டத்தை மீறி, புகை பிடித்த 60 சினிமாப் பிரியர்களுக்கு 'நடமாடும் நீதி மன்றம்' ஒன்று பல தரப்பட்ட அபராதம் விதித்துள்ளது

சினிமா தியேட்டர்களில் புகை பிடிக்கக்கூடாது என்ற சட்டத்தை மீறியவர்களுக்கு தண்டனை தரப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

ஆண்டவனுக்கு இரு சிறுவர்களின் உயிர் காணிக்கை!

அங்கும் - இங்கும் பக்தி நிலை!

கட்டாக், மார்ச் 16—

சம்பல்பூர் மாவட்டத்தில் உள்ள ஹால்திபள்ளி எனும் கிராமத்தில், 'சூனிய வித்தை' பழகிக்கொள்வதற்காகக் காணிக்கை செலுத்துதல் என்று கூறி, ஒரு ஏழு வயதுச் சிறுவன் கடந்த வாரம் கொல்லப்பட்டதாக கிடைத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது. இதை ஒட்டி, 'ஆதிவாசி' ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

★

காணிக்கையாக சிறுவனின் தலை

கோவை, மார்ச் 16—

காணிக்கை தருவதற்காக நீண்ட நாட்களாக ஒருவன் ஒரு பையனைத் தேடி அலைந்து ஒருகால் வயல் வெளியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனைத் தந்திரமாக அழைத்துச் சென்று அவனது கழுத்தைச் சீவி, காணிக்கையைச் செலுத்தியதாக தகவல் எட்டியுள்ளது.

ரங்கசுவாமி என்ற ஒருவன் நீண்ட நாட்களாக, காணிக்கை செலுத்த சிறுவன் ஒருவனைத் தேடி அலைந்தானும்

இங்கிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள ஒக்கிலிப்பாளையத்தில் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த பதினைந்து வயதுடைய கிட்டன் என்றழைக்கப்படும் கிருஷ்ணன் நின்று கொண்டிருந்ததை ரங்கசாமி பார்த்திருக்கிறான்.

(4-ம் பக்கம் பார்க்க)

500 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிப்பு!

சென்னை, மார்ச் 16—

இவ்வாண்டில் 500 கிராமங்களுக்கு மின்சார வசதி விரிவுபடுத்தப்படுமென்றும், 6,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கிடைப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும் மராமத்து இலாகா அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்:அண்ணாதுரை

சென்னை 17—3—55 வியாழன்

அவசியம் உணர்க!

ஒலிபெருக்கி—மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஆயிரம் ஆயிரம் அரும் பொருள்களைத் தந்துள்ள விஞ்ஞானத்தின் அரிய கண்டுபிடிப்புகளுள் ஒன்ருகவும், மனித வாழ்வில் இன்றியமையாததாயும் விளங்குவதாகும்.

மாபெரும் மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், திருமண விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு மட்டுமின்றி, சத்கதா காலட்சேபங்கள் போன்றவைகட்கும், பொதுவாக மக்கள் எங்கெல்லாம் கூடுகிருர்களோ அங்கெல்லாம் தேவையானதாயும், தவிர்க்க முடியாத சாதனமாயும் அந்த ஒலிபெருக்கி உதவுகிறது.

ஒலிபெருக்கி — பொதுவாக நாட்டில் நடைபெறும் விழாக்களில் - அநேகமாக எல்லாவற்றிலும் இடம் பெற்றிருந்தாலும் கூட, பல்வேறு அரசியல் கட்சியினர் நடத்தும் மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றில், அது வெகுவாக-மிகுந்த பயன் கருதி உபயோகிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தி. மு. கழகம்தான் நாட்டு மக்களிடை அதிகமான அளவு தொடர்புகொண்டுள்ளது. அந்தத் தொடர்பினை ஏற்படுத்தித் தரும் சாதனமாக பெரும் அளவு பொதுக்கூட்டங்களையே கழகம் பயன்படுத்தி வருகிறது. நமது பொதுக்கூட்டங்கள், ஏனைய அரசியல் கட்சிக் கூட்டங்களில் இல்லாத அளவு, மக்கள் அதிகம் பங்கு பெறுவனவாயுள்ளன.

அந்தக் காரணத்தால்—கூடுகிற பல்லாயிரக்கணக்கான மக்களின் வசதி கருதி, ஒலிபெருக்கி அமைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாக, மிகமிகத் தேவையானதாக ஆகிவிடுகிறது.

நாட்டு மக்கள், பொதுவாக அரசியல் விழிப்புணர்வு பெறுவதற்கு, பொதுக்கூட்டங்களில் பல அரசியல் கட்சியினரும் தரும் விளக்கங்களை கேட்டுத் தெளிவதைத் தவிர வேறு வாய்ப்பில்லை; காரணம் இந்த நாட்டு மக்களில் 100க்கு 70 பேருக்கு மேல் கல்வி அறிவு அற்றவர்கள்; அதனுல், அவர்களிடம், நாட்டு நிலைகளை ஏட்டில் எழுதிக்காட்ட முடியாது.

இந்த நாட்டிலே ஜனநாயகம் நடைபெறுவதாகக் கூறப்படும்போது, நாட்டுத் தலைமையை ஏற்றுள்ள மக்கள், நாட்டு நிலைகளையும், நாடாளும் அரசாங்கத்தின் நிலைபற்றியும் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

இந்தஉண்மையை, நாட்டில் உள்ள நல்லறிவாளர் அனைவரும் ஒப்புக்கொள்வர் என்றே நமபுகிருேம—மக்களுக்காக இல்லாவிடினும், தாங்கள் கூறிவருகிற 'ஜனநாயகம்' நிலைபெற வேண்டுமென்பதற்காகவாயினும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ்காரர்களும் கூட ஒப்புக்கொண்டுதானுக வேண்டும்.

'ஜனநாயக' நாட்டில்—அதுவும், நூற்றுக்கு 30 பேர்கூட கல்வியறிவு பெருத மக்களைக் கொண்டுள்ள நாட்டில், பொதுக் கூட்டங்கள்தான் பல்வேறு அரசியல் கட்சியினரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறவும், மக்கள் அவற்றைக் கேட்டுத் தெளிவு பெறவும் பயன்பட முடியும்.

அந்த நிலையில், 'ஜனநாயகம்' வேரூன்றி தழைத்தோங்கி, மக்களுக்குகந்த ஒரு அரசியல் அமைப்பு முறையாக வெற்றி பெற வேண்டும் என்று காங்கிரஸ் அரசாங்கம் உண்மையில் எண்ணுமானுல், பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்குத் தேவையான நல்ல பல வசதிகளைச் செய்து தரவேண்டிய பொறுப்பை உணர்ந்திருக்க வேண்டும்.

ஆனுல், அரசாங்கத்தின் போக்கோ அதற்கு நேர்மாருக இருக்கிறது.

பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு, ஒலிபெருக்கி எவ்வளவு அவசியம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல; அந்த ஒலி பெருக்கி வசதியை கூட்டங்களில் அமைப்பதற்கு அரசாங்கம் விதித்துள்ள தடைகள் ஏராளம்.

ஒலிபெருக்கி அமைப்பதற்காக போலீஸ் அதிகாரிகளிடம் —அதிலும் குறிப்பாக சென்னை நகரில் உள்ள அதிகாரிகளிடம் அனுமதி பெறுவதில் உள்ள இடையூறுகளைக் குறித்து அவ்வப்பொழுது நமக்கு ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் எழுதிய வண்ணமுள்ளனர்.

ஒலிபெருக்கி அனுமதி தர மறுப்பதற்கு பொதுவாக போலீஸ் அதிகாரிகள் காட்டுகிற காரணம் எல்லாம், கூட்டம் நடத்துவதாக தெரிவிக்கப்படுகிற இடம் திறந்த மைதானமல்ல—தெருமுனைகள் சந்திக்கும் இடத்தில் உள்ள குறுகிய வெளிதான்—அந்த இடங்களில் ஒலிபெருக்கியுடன் கூட்டம் நடத்துவது அருகில் உள்ள வீடுகளில் வசிப்போருக்குத் 'தொல்லை'யாயும், போக்குவரத்திற்கு இடைஞ்சலாயும் உள்ளது — என்பதுதான்!

பொதுக் கூட்டம் நடத்துவதற்கென்றே, நகரங்களில், பேட்டைக்குப் பேட்டை தனி மைதானங்கள் அல்லது பூங்காக்கள் அல்லது மண்டபங்கள் ஆகியவற்றை சர்க்காரோ அல்லது நகராட்சி மன்றங்களோ அமைத்துத் தந்திருந்தால் தெருமுனைகளில் கிடைக்கும் சிறிய திறந்த வெளிகளில் பொதுக் கூட்டம் நடத்த வேண்டிய அவசியம் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் ஏற்படாது.

சென்னை நகரில் இருக்கிற ஒரு சில பொது இடங்கள்— 'ஐலண்ட் கிரவுண்ட்,' 'ராஜாஜி மண்டபம்' ஆகியவை— 'ஆளும் கட்சிக்கு மட்டுமே தான்,' என்ற நிலையிலுள்ளது; அவ்வாறிருக்க, இதர கட்சியினர், மக்களை தெருமுனைகளில் சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லையே!

போக்குவரத்திற்கு இடைஞ்சல் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல; கூட்டம் நடைபெறுகிற தினத்தன்று, அந்த இடத்தில் இரண்டொரு போலீசாரை நிறுத்தி, கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகில் உள்ள தெருக்களில் போக்குவரத்தைச் சீர்செய்துகொள்வது அவ்வளவு சிரமமான காரியமல்ல.

"கூட்டம் நடைபெறும் இடங்களின் அருகில் உள்ள வீடுகளில் வசிப்போருக்கு ஒலிபெருக்கி பெரும் 'தொல்லை' யாகயிருக்கிறது" என்று 'சிலர் ஓலமிடுகிருர்கள்.

ஒரு பேட்டையில் உள்ள மக்கள் அத்தனை பேரின் நலன் கருதி நடைபெறும் பொதுக் கூட்டத்தில் இடம்பெறும் ஒலிபெருக்கி, தொல்லை தருவதாயிருக்கிறதென்று எந்த ஒரு குடிமகனும் கருதமாட்டான், அப்படி யாரேனும் கருதி கூச்சலிடுகிருர்கள் என்ருலும், அந்த ஒரு சிலருக்காக, பெரும்பாலான மக்களின் கூட்டம் கூடும்உரிமை பறிக்கப்படலாகாது.

மருத்துவ மனை போன்றவை இருந்து, அங்குள்ள நோயாளிகளுக்கு ஒலிபெருக்கி தொல்லை தரக்கூடியது என்று கருதினுல், அந்த மருத்துவமனைக்கு அருகில் கூட்டம் நடத்த அனுமதி தராமலிருப்பதற்கு நியாயமிருக்கிறது.

அதேபோல, நாகபுரி நீதிபதி இந்த மார்ச் திங்கள் 14ந்-தேதி முதல் ஏப்ரல் திங்கள் 4-ந்தேதி வரை, நகர எல்லைக்குள் காலை 7 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணிவரையிலும் ஒலிபெருக்கி உபயோகிக்கக் கூடாதென்று உத்தரவிட்டுள்ளார் — நகரில், மாணவர்கள், அந்நாட்களில் பரீட்சை எழுதுவதால்! நியாயமான உத்தரவுதான்!

ஆனுல், இங்கு, மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை நடைபெறுகிற பொதுக் கூட்டங்களுக்கு அல்லவா ஒலிபெருக்கி அனுமதி தர போலீசார் தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிக்கிருர்கள்;

கூட்டம் கூட்டுவதற்கு அரசியல் சட்டம் தந்துள்ள உரிமையையும், கூட்டம் கூட்ட வேண்டியுள்ள அவசியத்தையும் மனதில் கொண்டு பொதுக் கூட்டங்களில் ஒலி பெருக்கி வசதி அமைத்துக் கொள்ள தங்குதடையின்றி அனுமதி தருமாறு போலீஸ் அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடக் கோருகிருேம்.

யாரோ சிலர் ஓலமிடுகிருர்கள் என்பதற்காக, போலீசார் பொதுக் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி வைத்துக்கொள்ள அனுமதி தருவதில், பொறுப்புணர்ந்து நடந்துகொள்ள இனியும் தவறுவார்களானுல், பிரச்சினை கழகத்தின் தீவிர கவனத்திற்குரியதாக மாறக்கூடும் என்று எடுத்துக்காட்டுகிருேம்.

கடன் வசதி

சௌராஷ்டிர மாநில இராஜப் பிரமுகர், மாநில சட்ட சபையின் வரவு-செலவுத் திட்ட விவாதக் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில், அவ்வப்போது விவசாயப் பொருள்களின் விலைகள் ஏறவும் இறங்கவுமிருப்பதினுல், அவதியுறும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் தாராளமாகக் கடன் வசதி, கூட்டுறவு பாங்குகள் மூலம் கிடைக்கும்படி செய்யப்படுமென்று குறிப்பிட்டிருக்கிருர்.

வடநாட்டு மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்கள்

மெர்க்காரா, மார்ச் 15—
கூர்ஜர மாநில வரவு - செலவுத் திட்டம் சட்டசபையில் பிரதமர் பூஞ்சா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திட்டத்தில் ரூ. 31·45 லட்சம் துண்டுவிழுகிறதாம்.

1955—56-ம் ஆண்டில் வருமானம் ரூ. 1,59,33,100 என்றும், செலவு ரூ. 1,90,79,300 என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வித புது வரிகளும் விதிக்கப்படவில்லை.

* * *

சிம்லா, மார்ச் 15—
இமாசலப் பிரதேச மாநில சட்டசபையில், 1955—56ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் முதன் மந்திரி டாக்டர் ஒய். எஸ் பார்மர் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

வருமானம் ரூ. 324 89 லட்சம் என்றும், செலவு ரூ. 349.03 லட்சம் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது; எனவே, ரூ. 24 14 லட்சம் துண்டு விழுமெனத் தெரிகிறது.

பற்ருக்குறையில் சுமார் ரூ. 15 லட்சத்தை ஒரு முனை விற்பனை வரி, அபிவிருத்தி வரி, பஸ் கட்டண வரி முதலிய வரி விதிப்புகள் மூலம் சரிக்கட்டிக் கொள்ளவும், எஞ்சியுள்ள பற்ருக்குறையை சென்ற ஆண்டு நிலுவையிலிருந்து சரிக்கட்டிக் கொள்ளவும் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

* * *

ஜம்மு, மார்ச் 15—
இந்த ஆண்டு காஷ்மீர் வரவு—செலவுத் திட்டத்தில் வருமானம் அதிகமாயும் செலவு குறைவாயுமிருக்கிறது

சட்ட சபையில் திட்டத்தை நிதி மந்திரி கிர்தாரிலால் டோக்ரா என்பவர் தாக்கல் செய்தார்.

அதிக வருமானமாக ரூ. 32.40 லட்சம் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1955-56-ம் ஆண்டில் வருமானம் ரூ. 582.62 லட்சமாகவும், செலவு ரூ 550.22 லட்சமாகவும் இருக்குமென திட்டமிடப்பட்டுள்ளது.

* * *

ஜெய்பூர், மார்ச் 15—
இராஜஸ்தான் மாநில வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 2 39 கோடி துண்டுவிழுகிறதெனத் தெரிகிறது.

1955-56-ம் ஆண்டில் வருமானம் ரூ. 22,30,00,000 என்றும், செலவு ரூ 24,69,29,000 என்றும் மதிப்பிடப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் சட்ட சபையில் தாக்கலாகியுள்ளது.

ரஷ்ய இரும்புஉருக்குத்தொழிற்சாலை

மத்திய பிரதேசத்தில் இடம்பெற்றது

புதுடில்லி, மார்ச். 15—
ரஷ்யாவின் உதவியுடன் இந்தியாவில் மத்திய பிரதேச மாநிலத்தில் துவக்கப்பட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இரும்பு எஃகு உற்பத்தி தொழிற்சாலைக்கு பிலாய் என்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்த இடம் ரஷ்ய நிபுணர்கள் சிபாரிசு செய்த 5 இடங்களில் ஒன்று எனக் கூறப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்கான ஒப்பந்தம் கடந்த பிப்ரவரி 2-ந் தேதியன்று கையெழுத்தாயிற்று.

★

திட்டங்களின் உடனடி பலன்

புதுடில்லி, மார்ச் 15—
ஜெர்மன் உதவியுடன் ஆரம்பித்துள்ள ரூர்கேலா இரும்பு உருக்கு உற்பத்திச்சாலையில் சுமார் 4,900 பேருக்கு வேலை கிடைக்கும்.

இப்பொழுது மத்திய பிரதேசத்தில் பிலாய் என்னுமிடத்தில் ரஷ்ய உதவியுடன் ஆரம்பிக்கப்படும் இரும்பு உருக்குத் தொழிற்சாலையில் 7,600 பேருக்கு வேலை கிடைக்கலாம்.

இத்தகவலை மத்திய அரசாங்க உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி அறிவித்திருக்கிருர்.

பிரிட்டிஷாரின் உதவியுடன் மூன்ருவது உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி இன்னும் பிரிட்டிஷ் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றன என்றும் கூறியுள்ளார்.

'உதவி'யின் விளக்கம்!

சென்னை, மார்ச் 15—
"ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கட்கும், நடுநிலைப் பள்ளிகளிலுள்ள சில வகைப்பட்ட ஆசிரியர்கட்கும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பென்ஷன் திட்டம், ஆரம்பத்தில் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் உள்ள எல்லா ஆசிரியர்கட்கும் பொருந்தும் என்றும், நடுநிலைப் பள்ளிகளிலுள்ள சில வகை ஆசிரியர்களும் இவர்களுடன் சேர்க்கப்பட்டிருப்பதின் காரணம், அவர்களின் நிலைமை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் நிலைமையைவிட எவ்வகையிலும் மேம்பாடு கொண்டதாக இருக்கவில்லை என்பதும், நடுநிலைப் பள்ளிகளில் உள்ள 'செகண்டரி கிரேடு' பயிற்சி பெற்ற ஆசிரியர்கட்குத் தரப்படும் ஊதிய அளவு அவர்கட்கும் தரப்படவில்லை என்பதுமே ஆகும் என்று, சென்னை மாநில கல்வி மந்திரி சுப்பிரமணியம், நிருபர்களடங்கிய கூட்டமொன்றில் கூறியிருக்கிருர்.

★

தகுந்த சமயம் எப்போதோ!

சென்னை, மார்ச் 15—
"சேலத்தில் ஒரு இரும்பு எஃகு உற்பத்திச்சாலை துவங்குவது பற்றி மத்திய சர்க்காருக்கு சென்னை சிபாரிசு செய்ததா?" என்றுசட்டசபையில்கேட்கப்பட்டபோது, "நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியைப் பொறுத்தது, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பது," என்று மந்திரி பக்தவத்சலம் கூறியிருக்கிருர்.

"தொழில் அபிவிருத்தியில் தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது; வட நாடு முழுவதுமாக அபிவிருத்தி செய்யப்படுகிறது என்பது ஆதாரமுடையதுதானு?" என்று ரங்கசாமி ரெட்டியார் கேட்டார்.

"எத்தனை நாளைக்குத்தான் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் பிரச்சினை இழுத்துக் கொண்டே செல்லும்? சர்க்கார் திட்டவட்டமாக என்ன செய்யவிருக்கிறது?" என்று கேட்கப்பட்டபோது, மந்திரி பக்தவத்சலம், "இது மத்திய அரசாங்கத்தின் கவனத்திலிருக்கிறது; தகுந்த சமயம் கிடைக்கும்போது சென்னை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்," என்று கூறியிருக்கிருர்.

ஏன் இருக்கக்கூடாது?

"சோவியத் நிபுணர் குழு சென்னையில் எந்த இடத்திற்கும் வருகை தந்து ஆராய்ச்சி நடத்தாதது மத்திய அரசாங்கத்தின் போதனையின் பேரில் தானு?" என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டபோது, "இது உறுப்பினரின் கற்பனைதான்" என்று மந்திரியார் மொழிந்திருக்கிருர்.

கழகச் செய்திகள்

பம்பாய் மாவட்ட தி. மு. கழகம்

20—2—55 மாலை 7 மணியளவில் தாராவி குடியரசு நிலயத்தில், தோழர் நம்பிநாராயணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: எஸ். தியாகராசன்; துணைச் செயலாளர்: யோ. தர்மராசன்; பொருளாளர்: விக்டர் பென்னியமேன்.

* * *

பம்பாய் மாவட்ட தி. மு. கழக நிர்வாகிகள் பொறுப்பு மாற்றுக் கூட்டம், 9—3—55 பிற்பகல் 2 மணியளவில், தோழர் சா. தர்மராசன் தலைமையில் நடைபெற்ற போது, கழக வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், தோழர் எஸ். வள்ளிநாயகம் கழக வளர்ச்சி குறித்துப் பேசினார்.

கும்மிடிபூண்டி தி. மு. க. 3-ம் ஆண்டு நிறைவு விழா

26—2—55 மாலை 5 மணி அளவில் கும்மிடிபூண்டி தி. மு. கழக 3-வது ஆண்டு நிறைவு விழா, தோழர் டி. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ச. சி. புவியரசு, திருமாவளவன் ஆகியோர் இயக்கப்பாடல்கள் பாடியபின், தோழர் இராதாமணாளன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் ப செ. தூயமணி ஆண்டறிக்கை வாசித்ததும் தோழர்கள் ஆ. கிருஷ்ணன், க. அறிவழகன் ஆகியோர் சிறிது நேரம் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனார், ஆட்சியாளர்களின் ஆர்ப்பாட்டத்தையும், பொது மக்களை அவர்கள் எந்தெந்த வகையில் ஏமாற்றுகிறார்கள் என்பது பற்றியும் விளக்கிச் சொற்பொழிவாற்றினார். இறுதியில் தோழர் என். வி. நடராசன், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிட நாடு பிரியவேண்டியதின் அவசியம் பற்றியும், திராவிட நாடு பிரிந்தால் எந்தெந்த வகையில் முன்னேற்றம் அடையலாம் என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

பாலையம்பட்டி தி. மு. கழக கட்டிடத் திறப்புவிழா

14—3—55, பகல் 12 மணியளவில் இவ்வூரில், தோழர் ஏ. எஸ். ஏ. சாமி தலைமையில் தோழர் சி. பொன்னுசாமி தி. மு. கழகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். தோழர் எம். பெரியகருப்பன் நாட்டுப்பண் இசைத்தார். தோழர் எஸ். பி. சாமி அனைவரையும் வரவேற்றார்; தோழர்கள் எம். பெரியகருப்பன், எஸ். பெருமாள், பி. தங்கச்சாமி ஆகியோர் பேசினர்; தலைவர் முடிவுரைக்குப் பின், எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

தபால்-தந்தி இலாகாவில் மோசடி!

இந்திய தபால்-தந்தி இலாகாவிற்கு, மோசடி, கையாடல் போன்றவைகளின் காரணமாக 1953-54-ம் ஆண்டில் ரூ. 7½ லட்சம் நஷ்டமேற்பட்டதென ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை ஒன்றில் காணப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் இதுபோன்ற காரணங்களால் ஏற்பட்ட நஷ்டத் தொகையைவிட இவ்வாண்டில் ரூ. 1¼ லட்சம் குறைந்துள்ளதெனவும், மோசடி, கையாடல் போன்ற குற்ற எண்ணிக்கைகளும் 2,179-லிருந்து 1,120 ஆகக் குறைந்துள்ளதென்வும் அவ்வாண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வேடிச்சிபாளையத்தில் தி. மு. க. திறப்பு விழா

8—3—55 மாலை கரூரை அடுத்த இவ்வூரில், தோழர் வி. எ இராமநாதன் தலைமையில் தி. மு கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் இரத்தினம் அனைவரையும் வரவேற்றார். தோழர் கே. ஏ. முருகேசனார் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசியபின், தோழர் இரா. சண்முகம் கழகக் கொடியை ஏற்றிவைத்து, கொடியின் இலட்சியம் பற்றியும், வெற்றிலைத் தொழிலாளர் நிலை குறித்தும், தி. மு. கழகம், வெற்றிலைத் தொழிலாளர் நலனுக்காகச் செய்து வரும் சேவைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

இறுதியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத், 'சமுதாயமும் அரசியலும்' என்பது பற்றி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார். சுற்று வட்டாரக் கிளைக் கழகங்கள், வெற்றிலைத் தொழிலாளர் சங்கம் ஆகியவை சார்பில் அவருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தோழர் சம்பத் அவர்கள் பேசுகையில், ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தைச் சுரண்டிவாழும் நிலையில் நமது சமுதாயத்திற்குத் தனி அரசு தேவை என்பதை விளக்கிவிட்டு, ஆவடி காங்கிரசில் நம் நாட்டுத் தலைவர்கள் வெறும் தொண்டர்களாகவும், சேவகர்களாகவும்தான் பாடுபட்டார்களே தவிர கொள்கைகளை வகுத்துத் தரும் பணியில் ஈடுபடவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

சேலூர் தி. மு. கழகம்

9—3—55 இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 1954 ஆகஸ்டு—1955 பிப்ரவரி வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், 2—10—54, 12—2—55 பொதுக் கூட்ட வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகம்

10—3—55 மாலை 7 மணிக்கு மேற்படி வட்ட கழக செயற்குழு கூட்டம் திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற போது பேரூர் பொதுக் குழு முடிவுகளை வரவேற்றும், 20-3-55 காலை 8 மணிக்கு ஐந்தாண்டுதிட்ட கண்டன ஊர்வலம் நடத்துவதெனவும், 27—3—55ல் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகத்தின் கட்டிடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமெனவும் முடிவு செய்யப்பட்டது.

இராயபாளையத்தில் தி. மு. கழக துவக்கவிழா

10—3—55 மாலை 6½ மணியளவில் திருமங்கலம் இராயபாளையத்தில் தி. மு. கழகம் துவக்கப்பட்டு இராமசாமி தலைமையில் துவக்க விழாப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் மதுரை எஸ். முத்து, கே. எஸ். சந்தானம், இரசாக், பிச்சை, நாராயணன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தை விவரித்தும் சொற்பொழிவாற்றினர்.

குன்றை தி. மு. கழகம்

10—3—55-ல் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், பல அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; கழக வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், பேரூர் பொதுக் குழுத் தீர்மானங்களை வரவேற்று முடிவு செய்யப்பட்டது.

வெரியப்பூரில் தி. மு. கழக (கிளை) திறப்பு விழா

11—3—55 மாலை 5 மணிக்கு, இவ்வூரில் கிளைக் கழகம் துவக்கப்பட்டது. அடிகளார் சிவநேசம் தலைமையில் தலைவாசல் மைதானத்தில் நடைபெற்ற துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் முத்துச்சாமி, ந. ரங்கசாமி, மு. பன்னீர்செல்வன், மு. கரிகாலன், பி. சமதர்மம் ஆகியோர் தி. மு கழகக் கிளை துவக்கவிழா குறித்தும், தி. மு. கழகத்தின் கட்டுப்பாடுகள், திட்டங்கள் ஆகியவை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

புதூர் கிராமத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

வடாற்காடு மாவட்டம் போளூர் தாலுகா ஆதமங்கலம் புதூர் கிராமத்தில் 11—3—55 மாலை 6 மணிக்கு அழகிரி அரங்கில், தோழர் வே. பரசுராமன் தலைமையில், தோழர்கள் என் வி. நடராசன், ப. உ. சண்முகம், கே. சுப்பிரமணியம் ஆகியோர் இன்றைய அரசியல், சமுதாயம் பற்றி வெகு விரிவாக விரிவுரையாற்றினர்.

பொத்தனூர் தி. மு. கழகம்

11—3—55 மாலை, வள்ளுவர் நிலையத்தில், தோழர் மலே. செகநாதன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வரவு—செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், 20—3—55ல், ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம் நடத்துவதெனவும், வெற்றிலைக்கு விற்பனை வரி விலக்களித்தமைக்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோட்டக்குப்பத்தில் தி.மு. கழகப் பொதுக்கூட்டம்

13—3—55 மாலை 6-30 மணிக்கு தோழர் என். இராசசேகரன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கடலூர் ஒ. டி. சித்தார்த்தன், என். வி. நடராசன் ஆகியோர் தற்கால அரசியல், தொழிலாளர் நிலைமை, திராவிட நாடு ஏன் பிரியவேண்டும் ஆகியவை பற்றி விரிவுரையாற்றினர்.

ஒரக்காட்டுப் பேட்டை தி. மு. கழகம்

13—3—55 மாலை 6 மணிக்கு நடைபெற்ற இவ்வூர் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், 20—3—55-ல் ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்நடத்துவதென்றும், 27—3—55-ல் தேர்தல் நடத்துவதென்றும், கழக சம்பந்தமான மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆமாதாபாத் நகர தி. மு. கழகம்

13—3—55 பிற்பகல் 12 மணியளவில், சமால்பூர் கழகப் பணிமனையில், கழகப் பொதுக்குழுவின் அவசரக் கூட்டம் தோழர் இரா. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றபோது,மணிநகர்வட்ட கிளை தனித்து 'ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்' நடத்திக்கொள்ள உரிமையளித்தும், அன்று ஊர்வலமிருந்தால் நிறுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டும், நகரக் குழு பிரதிநிதி தோழர் வைத்தியநாதன் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்வதெனவும், 27—3—55ல் (ஆலைகளின் விடுமுறைகளை கவனித்து) பொது உறுப்பினர்கள் கூட்டம் கூட்டி நகர கிளை தேர்தல் நடத்துவதெனவும்முடிவு செய்யப்பட்டது.

சந்தைப் புதுப்பாளையம் தி. மு. கழகம்

18—3—55-ல், நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், 24—3—55-ல் ஐந்தாண்டுத் திட்ட கண்டனப் பொதுக்கூட்டம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி நகர தி. மு. கழகம்

13—3—55 காலை 10 மணிக்கு, திருச்சி, சிந்தாமணி தி. மு. கழகக் கிளை அலுவலகத்தில், தோழர்கள் எம். எஸ். மணி தலைமையிலும், ஜி. பராங்குசம் முன்னிலையிலும் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, பொதுக் குழு தீர்மானத்தின்படி ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் கூட்டம் நடத்துவது பற்றியும், கழகத் தேர்தல் விளக்கமும்—முறையும் அறிவித்த பின், பேரூர் பொதுக் குழுத் தீர்மானத்தை வரவேற்றும்; 20—3—55-ல் (அரசியலாரின்) ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டத்தை திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் நடத்துவதென்றும், திருச்சியில் தி. மு. கழக ஆதரவில் தொழிற் சங்கங்களை நடத்துவதெனவும், 20—3—55 காலை 10 மணிக்கு திருச்சி நகர தி. மு. கழக விசேட உறுப்பினர்கள் கூட்டத்தை திருச்சி 20-வது வட்ட தி. மு. கழகக் கிளை சுண்ணும்புக்காரத் தெரு அலுவலகத்தில் நடத்துவதெனவும், அப்போது நகரக் கழகம் இதுவரை செயலாற்றிய விபரமும், கழக வரவு-செலவு இதுவரையில் நடைபெற்ற விபரமும் கொண்ட 'குறிப்பேடு' தயார் செய்து 27—3—55 காலை 10 மணிக்கு நடைபெற இருக்கும் நகரக் கழகச் செயலாளர் தேர்வின் போது வரவிருக்கும் புதுச் செயலாளரிடம் ஒப்படைப்பதற்கான பட்டியலை 20—3—55-ல் நடைபெறவிருக்கும் கமிட்டிக் கூட்டத்தில் அளிப்பதென்றும், நகரக் கழக தேர்தலுக்கான இடத்தை சின்னையா(பிள்ளை) சத்திரம்,அல்லது சங்கரன் டியூடோரியல் பள்ளியில் அமைத்துக் கொள்ளுவதென்றும், வாக்குரிமைகளை வழங்கும் முறையை விளக்கி துண்டு கோட்டீசுகள் அச்சடித்து உறுப்பினர்களுக்கு அளிப்பதென்றும், அது போது கிளைக் கழகங்களில் மாங்ல உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் பட்டியலையும், அதன் நகலையும் நகரில் உள்ள கிளைக் கழகங்கள் நகரக் கழகக் கூட்டம் 20—3—55-ல் நடைபெறும்போது சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பெற்று, 27—3—55 அன்று நகர கழகத் தேர்தலில் தங்கள் வாக்குரிமைகளை வழங்கும் உறுப்பினர்கள் தேர்தல் தினத்தன்று, தேர்தல் அலுவலகத்தில் சரியாக காலை 10 மணிக்கு வந்து கலந்துகொள்ள வேண்டுமென்றும், 10 மணிக்கு மேல் வந்து காலதாமதம் கடத்தும் உறுப்பினர்கள் தங்கள் வாக்குரிமைகளை இழந்தவர்களாகக் கருதி, தேர்தலில் அனுமதிக்கப்படமாட்டாது என்று முடிவு செய்யப்பட்ட தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

திருவானைக்காவல் தி. மு. கழக ஆண்டுவிழா

இவ்வூர் தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் சி. வடிவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. துரைசாமி ஆண்டறிக்கை வாசித்தார். பின்னர் தோழர்கள் எம். எஸ். மணி, அன்பில் தர்மலிங்கம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் தி மு. கழகத்திற்கும், மற்ற கட்சிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளையும், தி. மு. கழகம் நாட்டுக்கு செய்துவரும் பணியினைப்பற்றியும், சமுதாய நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

கூட்ட இறுதியில், விருதை தோழர் எம். எஸ். பெரியசாமி, டாக்டர் பி. வி. நாராயணசாமி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இவ்விழாவையொட்டி 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

திருமணங்கள்

கெங்கன் — தனபாக்கியம் திருமணம்

கடந்த 13—3—55, காலை 8½ மணியளவில் தோழர் எஸ். கெங்கன்—தோழியர் தனபாக்கியம் திருமணம் சென்னை வில்லிவாக்கம் அடுத்த கொளத்தூர் கிராமத்தில் நடைபெற்றது.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்தார்.

மணமக்கள் உறுதிமொழி மேற்கொண்டு, மலர் மாலை மாற்றிக் கொண்டனர்.

மணமக்களைப்பாராட்டி தோழர்கள் மு. புரட்சிமணி, முகவை ஆர். எஸ். பாண்டியன், மாணிக்கவாசகன் ஆகியோர் பேசினர்.

தோழர் எஸ். தங்கராஜ் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி-பொறுப்பாளர்.

* * *

4—3—55 காலை 9 மணிக்கு, புதுவை மக்கள் கான சபா நிலயத்தில், தோழர் பாரதிதாசன் தலைமையில், தோழியர் ஆனந்தவல்லி—தோழர் சம்பந்தம்; தோழியர் பேபி—தோழர் விநாயகம்; தோழியர் சகுந்தலை—தோழர் சுவாமிநாதன் ஆகியோர் திருமண நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன. தலைவர் தம் உரையில் திராவிட இயக்கக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட திருமணங்களே பண்டைய இலக்கியத்துக்கும் இன்றைய உலகப் போக்கிற்கும் பொருந்தும் என்பதை விளக்கிக் காட்டினார். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. இத்திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

திருமண அன்பளிப்பு

10—3—55 காலை, சென்னை இராயப்பேட்டை, வாயிட்ஸ்ரோட் எண். 155 இல்லத்தில், கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நகைச்சுவை நடிகர் தோழர் எம். என். கிருஷ்ணன்—தோழியர் பார்வதி திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு, மணமகனால் ரூ. 5 அன்பளிக்கப்பட்டது-பெற்றுக்கொண்டோம்-நன்றி-பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

5—3—55 மாலை 6 மணிக்கு வேலூரில், தோழர் இரா. இரத்தின சபாபதி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள், தோழர் வி. எ. இலக்குமணனின் இரண்டாவது ஆண் மகவுக்கு 'செங்குட்டுவன்' என பெயரிட்டார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — பெற்றுக்கொண்டோம் — நன்றி—பொறுப்பாளர்.

* * *

தர்மபுரி மோட்டார் நிலைய தி. மு. கழகத் தோழர் எம். பி. பழனியப்பன் ஆண் மகவுக்கு, 7—3—55-ல் தோழர் பி. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற பெயர் சூட்டு விழாவில், தோழர் எம். பி. சுப்பராயன் 'எழில் அரசு' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

சென்னை, மார்ச் 15—

கிராமாந்திர ஆரம்பப் பள்ளி ஒவ்வொன்றும், குறைந்தபட்சம் 5 ஏக்கர் விவசாயப் பண்ணை பெற்றிருக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருப்பதாகநிதிஅமைச்சர் சுப்ரமணியம் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சட்டசபையில்....

★

'நமக்குக் கவலையில்லை!'

"அயர்லாந்தைச் சேர்ந்த ஆப்ரேமேனன் என்பவர் எழுதிய 'இராமாயணம் திருப்பிச் சொல்லப்பட்டது' எனும் புத்தகம் சர்க்காரால் தடை செய்யப்படவில்லை" என்று நிதி அமைச்சர் கூறியிருக்கிறார்.

"'பதினான்கு ஆண்டுகளாக இராமனைப் பிரிந்து வாழ்ந்த சீதை கற்பு நெறி கெட்டவள் தான்,' என்று எழுதப்பட்டுள்ள அந்தப் புத்தகத்தை அரசாங்கம் தடை செய்யவில்லையா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர், அப்புத்தகம் லண்டனில் பிரசுரம் செய்யப்பட்ட புத்தகமாகையால் நாம் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும், மேலும், அப்புத்தகத்தை அதிகம் பேர் வாசிப்பதாகத் தெரியவில்லை என்றும் கூறினார்.

உயிர் பிழைக்குமா?

குறுக்கெழுத்துப் போட்டிப் பரிசுத் தொகைகளைக் கட்டுப்படுத்துமாறு மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் யோசனை கூறியுள்ளதாக அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

உறுப்பினர் ஒருவர், "அந்த யோசனை, குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடை செய்யவா, அல்லது பரிசுத் தொகைகளைக் கட்டுப்படுத்தவா?" என்று கேட்டபோது, அமைச்சர் "முதலில், தடை செய்துவிடுமாறு தான் யோசனை கூறினோம்; ஆனால், 'முழுவதுமாகத் தடை செய்துவிட்டால் கஷ்டங்களேற்படும்; அதனால் தாமதம் ஏற்படலாம்,' என்று மத்திய சர்க்கார் பதில் அளித்தமையால், பின்னர் பரிசுத் தொகையைக் கட்டுப்படுத்துமாறு சிபாரிசு செய்தோம்," என்று குறிப்பிட்டார்.

"குறுக்கெழுத்துப் போட்டிகள், சோம்பேறிகளைச் செயலாற்றத் தூண்டுகிறது; சிந்திக்காதவர்களைச் சிந்தனை செய்ய வழி செய்கிறது; அதோடு அதிருஷ்டம் உள்ளவர்கட்குப் பணத்தையும் கொடுக்கிறது; எனவே குறுக்கெழுத்துப் போட்டிகளை எப்படி தொல்லை தருவனவாகக் கொள்ள முடியும்?" என்ற கேள்விக்கு, அமைச்சர், இந்தக் கருத்து உறுப்பினரின் சொந்தக் கருத்தே தவிர, பொதுமக்களின் கருத்தல்ல என்றும், பிறமக்களனைவரும் குறுக்கெழுத்துப் போட்டிகளை தொல்லை தருவனவாகவே கருதுகின்றனர் என்றும் கூறினார்.

"மக்களிடையே நிலவி வரும் சூதாட்ட மனப்பான்மையை திருப்திப்படுத்த சர்க்காரே குறுக்கெழுத்துப் போட்டி நடத்துவதுதானே?" என்ற கேள்விக்கு, அமைச்சர், மக்களின் எல்லா ஆசைகளையும் சர்க்கார் திருப்தி செய்ய முடியாது என்று குறிப்பிட்டுவிட்டு, "சூதாட்டத்தின் ஆசையை மக்களிடையே உண்டாக்கி அதன் மூலம் சிலர் பணம் சம்பாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பதே சர்க்காரின் நோக்கம்," என்றார்.

"போட்டிகளில் கிடைக்கும் இலாபத்தில் பாதியை சர்க்கார் வரி போட்டு வசூலித்தால் நிலவரி உயர்வைக் கைவிட்டுவிடலாமே(!)" என்று ஒரு உறுப்பினர் யோசனை தெரிவிக்கும் வகையில் கூறிய போது, அமைச்சர், "போட்டி வசூலில் வரி விதிப்பது மத்திய சர்க்கார் அதிகாரத்தின்கீழ் உள்ள வருமான வரி பிரச்சினை என்றும், நாம் அவர்களிடம் சென்று இலாபத்தில் பங்கு கேட்டால், அவர்கள் நம்மை, தங்கள் நஷ்டத்தில் பங்கேற்றுக் கொள்ளும்படி திருப்பிக் கேட்கலாம்(!)" என்றும் கூறினார்.

தணியாத பிரச்சினை!

"அண்மையில் ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டை யொட்டி, அவ்விடத்தைச் சீர் செய்ய டிராக்டர்கள் முதலியன சர்க்காரால் அனுப்பப்பட்டனவா?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, அமைச்சர் பக்தவத்சலம் "ஆம்" என்று கூறிவிட்டு, இதுபோன்ற பிரச்சினை தவிர, இதர காரியங்களுக்கும் இம்மாதிரி கருவிகள் தரப்பட்டுள்ளன," என்றும் கூறினார்.

உத்தேசத்திலில்லை?

"சர்க்கார் மருத்துவ மனைகளில் இருப்பதுபோன்று லோக்கல் பண்டு மருத்துவ மனைகளுக்கும் ஆலோசனைக் குழுவினை நிறுவுவது பற்றிய விஷயம் சர்க்காரின் உத்தேசத்திலில்லை" என்று மந்திரி ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

கெஞ்சுகின்றனரா?

"தாம்பரத்திலிருந்து திருச்சி வரையிலும் மின்சார இரயில் போக்குவரத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை மேற்கொள்வது கஷ்டமாக இருக்குமானால், தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையிலாவது அவ்வசதி செய்துதருவதற்கான ஏற்பாடுகளை முதலில் கவனிக்க வேண்டுமென மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

கிராமக் கடன் வசதி

"கிராமக் கடன் வசதிகளை அபிவிருத்தி செய்ய கூட்டுறவு ஆலோசனைக் குழு செய்துள்ள சிபாரிசுகள் சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருவதாகக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஷெட்டி கூறியிருக்கிறார்.

காலவரையறை கிடையாது?

"ஒரு சர்க்கார் சிப்பந்தியைப் பாதிக்கும் வகையில் உள்ள புகார் குறிப்புகளை, அவரது மேலதிகாரி தமது சொந்த 'பைலில்' எழுதி வைத்தால், அது சம்பந்தப்பட்ட தகவலை சிப்பந்திக்குத் தெரிவிப்பதற்கென குறிப்பிட்ட காலவரையறை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை" என்று அமைச்சர் சுப்பிரமணியம், கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

சிலகாலம் பிடிக்கும்?

மாவட்டங்களிலுள்ள ரெவினியூ நிர்வாகங்களின் சீரமைப்புக்கென நியமிக்கப்பட்டிருந்த குழு சேகரித்த தகவல்கள் யாவும் சர்க்கார் பரிசீலனையிலிருந்து வருகின்றன என்றும், முடிவுகள் செய்ய மேலும் சில காலம் பிடிக்கும் என்றும், சர்க்கார் பரிசீலனை முடிவுற்ற பின்னர், மேற்படி குழுவின் அத்தகவல்களை சட்டசபையில் சமர்ப்பிப்பது பற்றிக் கவனிக்கப்படுமென்றும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

சாயத் தொழிற்சாலை

கைத்தறி 'செஸ்' நிதியிலிருந்து சாயத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது பற்றிய பிரச்சினை கூட்டுறவு ரிஜிஸ்திராரின் பரிசீலனையிலிருந்து வருவதாக அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

வேலை நிறுத்தங்கள்

சென்ற ஆண்டு ஆகஸ்டுத் திங்களிலிருந்து டிசம்பர் வரையிலும், சென்னை மாநிலத்தில் 86 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன என்றும், இவற்றுள் 54 வேலை நிறுத்தங்களுக்குக் காரணமே தெரியவில்லை என்றும் அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மணமாகாத மகளிர் பணி புரியத் தடை?

"சர்க்கார் இலாகாக்களில் குமாஸ்தாக்களாகவும், டைப்பிஸ்டுகளாகவும் மணமாகாத இளம் பெண்களை நியமிக்கக் கூடாதென சர்க்கார் முடிவு செய்துள்ளதா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது அமைச்சர் சுப்பிரமணியம் 'இல்லை' என்று பதிலளித்தார்.

"இளம் பெண்கள் வேலைக்கு வருவது தடுக்கப்படுகிறதா?" என்று மற்றொரு உறுப்பினர் கேட்டபோது அமைச்சர், அப்படி ஒன்றும் செய்யமுடியாதென்றும், 'பப்ளிக் சர்வீஸ் கமிஷனு'க்கு மனுச் செய்துகொண்டு அதன் மூலம் வருபவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்றும் கூறினார்.

வரி செலுத்தினால்.........

நில கிஸ்தி (வரி) செலுத்தும் போது, வரிப்பணத்தைச்செலுத்துவோருக்கு அச்சடிக்கப்பட்ட இரசீதுகளை ரெவினியூ இலாகா அதிகாரிகள் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென் சபையில் பல உறுப்பினர்களால் வற்புறுத்தப்பட்டது.

இம்முறையை ஏதாவது ஒரு இடத்தில் பரீட்சார்த்தமாக செய்து பார்ப்பதை சர்க்கார் கவனிக்குமென்றும், முன்பு புதுக்கோட்டையில் இம்முறை அமுலிலிருந்ததாகக் கூறப்படுவதால் அங்கேயே மீண்டும் இதனை நடத்தி பரிசோதனை செய்து பார்க்கலாமென்றும் மந்திரி மாணிக்கவேலர் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்போது கிஸ்தி (வரி) செலுத்துவோர் இரசீது பெற உரிமையுண்டென்றும், அந்த இரசீது ஒரு காகிதத்தில் தந்தாலும் செல்லுபடியாகும் என்றும் அமைச்சர் மேலும் கூறியிருக்கிறார்.

செலவழித்தது எவ்வளவு?

கிராமங்களில் வீடுகள் கட்டுவதற்கான திட்டங்களுக்காக சென்ற 1953-54-ம் ஆண்டில் ரூ 41,000 செலவிடப்பட்டதென்றும், இத்திட்டங்களை, தென் ஆற்காடு மாவட்டத்தில் மூன்று வீடுகள் கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் கவனித்தன என்றும், அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கேள்வி ஒன்றுக்குப் பதிலாகத் தெரிவித்திருக்கிறார்.

பரிசீலனை முடியட்டும்!

தற்போது நடைபெற்றுவரும் பரிசீலனை முடிவடைந்து, இணைப்புக் குழு தனது அறிக்கையையும் தயாரித்த பின்னர், நெய்வேலி திட்டம் பற்றி அதிகார பூர்வமான விரிவானதொரு அறிக்கை வெளியிடுவதை சர்க்கார் கவனிக்கும் என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

இராசப்பய்யன்சாவடி

19—3—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: மா. வீரைய்யன்

பேசுவோர்:

என். வி. நடராசன்
பி. எஸ். பி. சாமி
ப. நாராயணசாமி

★

வேலூர் (சேலம்)

வ. உ. சி. திடலில்

19—3—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: வி. எஸ். சதாசிவம்

பேசுவோர்:

சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்
இரா. சண்முகம்
வி. கே. இராசு
வி. ஏ. இராமநாதன்

★

பொள்ளாச்சி

தேர் நிலையில்

19—3—55 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

எஸ். அப்பாவு
ப. நாராயணன்
க. துரைக்கண்ணன்
க. நெடுஞ்செழியன்

ஏ. கோவிந்தசாமி

போளூர் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

20—3—55 மாலை 4-மணி அளவில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களுக்கு போளூர் பஞ்சாயத்து போர்டு சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

மதுரையில் ஐந்தாண்டு திட்ட கண்டன ஊர்வலம்

20—3—55-ல், மதுரையில் மாபெரும் ஊர்வலம் நகர தி மு. கழகத்திலிருந்து புறப்பட்டு, நான்கு மாசி வீதிகள் வழியாக திலகர் திடலில் வந்து முடியும். மேற்படி ஊர்வலம், பொதுக்கூட்டத்தில் தி. மு. கழக உட்கிளைகள் யாவும் வடநாட்டு ஏகாதிபத்ய எதிர்ப்பு மொழிகள் பொறித்த அட்டைகள் தாங்கி ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வந்து கலந்து கொள்ளுமாறு தோழர் எஸ். முத்து வேண்டிக்கொள்ளுகிறார்.

கடலங்குடி வேலாயுத மன்ற முதல் ஆண்டு விழா

19—3—55 மாலை 5 மணிக்கு, கடலங்குடி பெரியார் திடல், வேலாயுதம் அரங்கில் தி. மு. க. வேலாயுத மன்றம் முதல் ஆண்டு விழா, தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. ஆர். பாலகிருட்டினன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சி மன்றம்

19—3—55 இரவு 10 மணிக்கு. மதுரை, கரீம்சா பள்ளிவாசல் தெருவிலுள்ள அறிவு வளர்ச்சி படிப்பகத்தின் சொற் பயிற்சி மன்ற 2-வது கூட்டம் மேற்படி படிப்பக அலுவலகத்தில், தோழர் எம். காசீம் தலைமையில் நடைபெறும். 'படிப்பகமும் அதன் பயனும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் பரிசு விழா

19—3—55 மாலை 6 மணிக்கு. சென்னை, சேத்துப்பட்டு, முத்தியப்ப கிராமணித் தெருவில் அமைந்துள்ள திடலில், பாரதிதாசன் அறிவகச் சார்பில், தோழர் மு கோ. இராசன் தலைமையில் மேற்படி பரிசு விழா நடைபெறும். தோழர்கள் பெ. தா. இன்மொழி, சைதை-சம்பந்தம் ஆகியோர் பேசுவர். தோழர் என். ஜீவரத்தினம் பரிசு வழங்குவார்.

பெங்களூர் - அலசூர் கிளை தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

20—3—55 காலை 9 மணிக்கு, பெங்களூர், அலசூர் தி. மு. கிளைக் கழகத் தேர்தல், தோழர் ஏ. டி பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும்.

ஈரோடு எஸ். அப்பாவு

சுற்றுப்பயணம்

மார்ச் 19: காலை: திருப்பூர்
மாலை: பொள்ளாச்சி
20: மதுரை

மார்ச் 21 முதல் 24-ந் தேதி வரை தோழர் ஈ. வெ. கி. சம்பத் சுற்றுப்பயணத்தில் கலந்துகொள்வார்.

குர்கான் நீர்ப்பாசனத் திட்டம்

இதுவரை தரவைப் பகுதியாயிருந்த குர்கான் மாவட்டத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்வதற்காக, ரூ. 48 லட்சம் செலவில், பஞ்சாப் அரசாங்கம் ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தைத் தயாரித்துள்ளதாம்.

இத்திட்டத்தின்படி சுமார் 3 லட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெற்று சாகுபடி நிலமாக்கப்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜமுனா நதியிலிருந்து குர்கான் வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால் வெட்டி நீர் வடித்துக்கொள்ளதென்பது திட்டமாம்.

இது பற்றியும், திட்டத்தை துவக்கி மூன்று குறிப்பிட்ட தவணைகளில் வேலையை முடித்து விடுவது பற்றியும் பஞ்சாப் அரசாங்கம் உத்தர பிரதேச அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறதாம்.

ஆண்டவனுக்கு இரு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பையனை அருகில் அழைத்ததற்கு, பையன், தண்ணீர் அருந்தச் செல்வதாகக் கூறியிருக்கிறான்; ஆனால், இந்தக் கொலைகாரனோ, அந்தச் சிறுவனிடத்தில், அருகில் உள்ள கரும்புத் தோட்டத்தில் தண்ணீர் இருப்பதாயும் அங்கு சென்று தாகம் தீர்த்துக் கொள்ளலாமெனவும் கூறி, அவனை அங்கு அழைத்துச் சென்று, கத்தியை எடுத்து சிறுவனின் தலையை ஒரே வீச்சில் சீவிக் கொய்து, துணியால் சுற்றி கையில் எடுத்துக்கொண்டு கிராமத்திற்குள் சென்றபோது, கிராமத்தார் ரங்கசாமியைப் பிடித்து போலீசில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அந்தச் சிறுவனுக்குப் பெற்றோர் இல்லை என்றும், யாரோ அவனது உறவினர் இல்லத்தில் வசித்து வந்ததாயும் கூறப்படுகிறது.

தான் நீண்ட நாட்களாக காணிக்கை செலுத்த ஒரு சிறுவனை தேடிக்கொண்டிருந்ததாயும், அந்தச் சிறுவன் கிடைத்ததும் அவன் தலையைக் கொய்து காணிக்கையை நிறைவேற்றிவிட்டதாயும் போலீசாரிடம் ரங்கசாமி கூறினானும்!

கிராமாந்திரப் பாங்கிகள்

விவசாயிகளுக்குக் கடன் தர ரூ. 24 லட்சம்?

சென்னை மாநிலத்தில் 25 கிராமாந்திர பாங்கிகளை நிறுவ சென்னை சர்க்கார் ஏற்கனவே உத்தேசித்துள்ளபடி, ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் இரண்டு பாங்கிகள் வீதம் அவை அமைக்கப்படும் என்று தெரிகிறது.

மத்திய சர்க்கார், விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கென கொடுத்திருந்த ரூ 24 லட்சமும் இந்தப் பாங்கிகளிடம் ஒப்படைக்கப்படுமென்றும், அப்பாங்கிகள், இந்த நிதியிலிருந்து விவசாயிகளுக்குக் கடன் வசதிகளைத் தரும் என்றும் கூறப்படுகிறது.

கொல்லத்தில் தீ விபத்து

பல ஆயிரம் ரூபாய் பெறுமான கோப்பரைத் தேங்காய் நஷ்டம்

கொல்லத்திலுள்ள எண்ணெய் ஆலை ஒன்றில் தீப்பிடித்துக் கொண்டதால், ஆலையில் குவித்து வைக்கப்பட்டிருந்த 300 கண்டிக்கும் அதிகமான கொப்பரைத் தேங்காய் பாழாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தீ விபத்தினால் ஏற்பட்ட நஷ்டத் தொகை பல்லாயிரக்கணக்கிலிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

மின்சாரப் பாய்ச்சலினால் அந்த விபத்து ஏற்பட்டதாம்.

பெண்மணியிடம் சிக்கிய திருடனுக்கு நேர்ந்த கதி!

ஐதராபாத், மார்ச் 13—

தப்பி ஓடப்பார்த்த திருடன் ஒருவன், ஒரு பெண்மணியினால் வீட்டின் அறையொன்றில் அடைக்கப்பட்ட செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது.

இங்குள்ள ஒரு வழக்கறிஞர் வீட்டில் மூன்று திருடர்கள் நுழைந்ததாகவும், இதைக்கண்ட மற்றவர்கள் கூச்சலிடவே வக்கீலின் மனைவியார் வெளியே ஓடி வந்து அம்மூன்று திருடர்களையும் துரத்தி அடித்ததாகவும், அவ்வம்மையார் கையில் சிக்கிக்கொண்ட ஒரு திருடன் மட்டும் அவ்வம்மையாரால் நன்றாக அடிக்கப்பட்டு, பின்னர் போலீஸ் உதவி வரும் வரை அவ்வீட்டு அறை ஒன்றினுள் அடைக்கப்பட்டுக் கிடந்ததாகவும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.